இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 27-01-2024

# மதுரையில் பண்பாட்டுச் சின்னம்

மதுரையில் மாபெரும் பண்பாட்டுச் சின்னத்தைத் திறந்து வைத்திருக்கிறார், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தமிழ்நாடு உள்ளளவும் நின்று நிலைபெறக் கூடிய சின்னமாக அது அமைந்துள்ளது.

**தைத் திங்கள் பிறப்பதையொட்டி பொங்கல் நாள், மாட்டுப் பொங்கல் நாள், காணும் பொங்கல் நாள், திருவள்ளுவர் நாள் ஆகிய அனைத்தையும் இணைத்து தமிழர் திருநாளாகப், பெருநாளாகக் கொண்டாடி வருகிறோம். இது ஒன்று தான் தமிழர்களின் பண்பாட்டுத் திருநாள் ஆகும். 'இந்த விழாவுக்குத்தான் கற்பனைக் கதைகள் இல்லை' என்பார் தந்தை பெரியார். 'இதற்கு இணையான விழா ஏதுமில்லை' என்பார் பேரறிஞர் அண்ணா. இப்பொங்கல் காலத்தில்தான் ஏறுதழுவுதல் என்ற விளையாட்டுப் போட்டிகளும் காலம் காலமாக நடத்தப்பட்டு வருகிறது. அவை பண்பாட்டின் அடையாளங்களாகவும், பண்பாட்டின் நீட்சியாகவும் நடைபெற்று வருகின்றன. இத்தகைய பண்பாட்டு விளையாட்டை நடத்துவதற்காக மதுரையில், 'கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்' கட்டி எழுப்பப்பட்டுள்ளது.**

ஏறுதழுவுதலைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் என்பதைப் போலவே, இந்த அரங்கத்தையும் பார்த்துக் கொண்டே இருக்கலாம் என்பது மாதிரி கம்பீரமாக அமைந்துள்ளது. ஏறுதழுவுதல் நடக்க, அதைச் சுற்றிலும் இருந்து பல்லாயிரக்கணக்கானவர்கள் பார்க்க, வீரக்காட்சிகளானது, சங்க இலக்கியக் காட்சிகளாக நம் கண்முன் அமைந்திருக்கின்றன.

சிந்துச் சமவெளி முத்திரைகளில் திமில் காளைகள் இருக்கின்றன. ஹரப்பாவும் அலங்காநல்லூரும் ஒரே மாதிரியான காளைகளைக் கொண்ட இடங்களாக இருக்கின்றன. கீழடியிலும் காளைகள் இருந்ததற்கான சாட்சியங்கள் கிடைத்துள்ளன. ஏறுதழுவுதலைப் பாடாத இலக்கியம் இல்லை என்று சொல்லும் அளவுக்கு, தமிழர்களின் வாழ்வியலோடு கலந்த விளையாட்டாக அது அமைந்துள்ளது. மாடுகள் எப்படி மனிதக்கூட்டத்தோடு கலந்தவையோ அதைப் போலவே, மாடுகளை வைத்து விளையாடும் விளையாட்டும் மனிதர்களோடு கலந்தவை ஆகும்.

**இந்தப் போட்டிகளை நடத்துவதற்கு சில சக்திகள் தடை எழுப்பியபோது 2006 ஆம் ஆண்டு தொடங்கி - இறுதி வெற்றியை உச்சநீதிமன்றத்தில் பெற்ற 2023 வரை போராடியும் வாதாடியும் வந்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆகும். தமிழ்நாடு ஜல்லிக்கட்டு நெறிமுறைச் சட்டத்தையே 2009 ஆம் ஆண்டு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உருவாக்கினார்கள். ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கு தடையில்லை என்ற இறுதித் தீர்ப்பை உச்சநீதிமன்றத்தில் பெறும் அளவுக்கு வாதாடியது மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு ஆகும்.**

"ஜல்லிக்கட்டு, மாட்டுவண்டிப் பந்தயம் உள்ளிட்ட போட்டிகளை அங்கீகரிக்கவில்லை. மாட்டு வண்டிப் பந்தயம், ஜல்லிக்கட்டுப் போட்டியை ஊக்குவிக்கும் திட்டமும் இல்லை. 'கேலோ இந்தியா' உள்பட எந்தத் திட்டத்தின் கீழும் அங்கீகரிக்கவில்லை. கிராமப்புற வீரர்களை ஊக்குவிக்கும் 'கேலோ இந்தியா' உள்ளிட்ட எந்தத் திட்டத்தின் கீழும் ஜல்லிக்கட்டு இல்லை" என்று தெரிவித்தவர், ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர் அனுராக் தாக்கூர். உச்சநீதிமன்றத்தில் கையை விரித்து விட்டது பா.ஜ.க. அரசு. ஆனால், 'இது உழவர்களின் பண்பாட்டுடன் கலந்தது' என்று வாதிட்டது தி.மு.க. அரசு ஆகும்.

இதன் தொடர்ச்சியாகத்தான் 'கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்' அமைத்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். ஆசியாவிலேயே மாடு பிடிவிளையாட்டுக்கான முதல் அரங்கமாக இது கம்பீரமாக நிற்கிறது. இதற்கான அரசாணை 3.2.2023 அன்று போடப்பட்டது. 24.1.2024 அன்று கட்டி முடித்துவிட்டார்கள் பொதுப்பணித்துறை அதிகாரிகள். 66.80 ஏக்கர் பரப்பளவில் உள்ள இந்த இடத்தில் 16 ஏக்கரில் அரங்க வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் 4,500 பேர் உள்ளே அமர்ந்து பார்க்கலாம். 62.77 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. அனைத்து வசதிகளும் இங்கு உள்ளது.

**பார்வையாளர் மாடம், பிரமுகர்கள் மாடம், வாடிவாசல், ஓய்வு அறை, காளைகள் காத்திருப்புக் கூடம், காளைகள் தயார்நிலைக் கூடம், அருங்காட்சியகம், நிர்வாக அலுவலகம், ஊடகவியலாளர் கூடம், விற்பனைக் கூடம், மாடுபிடி வீரர்கள் தங்கும் அறை, மருத்துவமனை என அனைத்துமே இங்கே உள்ளது. ஒரு பண்பாட்டு விளையாட்டுக்கு என தனியாக இத்தனை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள அரங்கம் எங்குமே இருக்காது.**

தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் சார்பில் இங்கே அருங்காட்சியகமும், நூலகமும் அமைக்கப்பட்டுள்ளது. காளைகள், ஏறுதழுவுதல் ஆகிய தகவல்களைக் கொண்டதாக மட்டுமே இந்த அருங்காட்சியகமும், நூலகமும் அமைக்கப்பட்டுள்ளது. காளை மாடுகள், பசுக்கள், எருமைகள் ஆகிய கன்றுகாலிகளைப் பற்றி படிப்பதற்காக மட்டுமே இது அமைந்துள்ளது. துறை சார்ந்த நூலகமாக இது அமைந்துள்ளது. 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல்கள் இங்கே இருக்கின்றன. 1881 ஆம் ஆண்டு எழுதப்பட்ட கிருஷி சாஸ்திரம், மாட்டு வாகடமும் மாட்டு அங்க அடையாளமும் ஆகிய புத்தகங்கள் இங்கு உள்ளன. ஓலைச் சுவடிகள் உள்ளன. அந்தக் காலத்து பொங்கல், மாட்டுவண்டிப் புகைப்படங்களும் ஓவியங்களும் உள்ளன. கோட்டையில் பொங்கல் அன்று குண்டுகள் முழங்கி வணங்க வேண்டும் என்று ஆளுநர் வில்லியம் பெண்டிங் போட்ட உத்தரவு (1806) காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**"தாய்த் தமிழ்நாட்டுக்கு தமிழ்நாடு என்று பேர் சூட்டிய பேரறிஞர் அண்ணாவின் வழியில் - தமிழுக்குச் செம்மொழித் தகுதியைப் பெற்றுத் தந்த முத்தமிழறிஞர் கலைஞரின் பாதையில் செயல்படும் இந்த திராவிட மாடல் ஆட்சியானது. தமிழ் மக்களின் பண்பாட்டு அடையாளமாக இந்த கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை அமைத்துள்ளது." என்று பெருமை பொங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருப்பது மிகமிகப் பெருமைக்கு உரியது ஆகும்.**

ஜாதி, மத பிளவுகள் இல்லாமல் 'தமிழர்' என்ற ஒற்றுமை உணர்வுடன் ஏறுதழுவுதல் கொண்டாடப்பட வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் வைத்துள்ளார்கள்.

**பண்பாட்டுச் சின்னமானது பண்பாடு காக்கும் சின்னமாகவே திகழும்!**

## கிளாம்பாக்கத்திலிருந்தே அனைத்துப் பேருந்துகளும் இயக்கப்படும்!

சென்னை, ஜன. 27 - கிளாம்பாக்கத்தில் உள்ள கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் நேற்று முன்தினம் மாலை திடீரென ஆய்வு செய்தார். கிளாம்பாக்கத்தில் இருந்து பல்வேறு பகுதிகளுக்குச் செல்லும் பாயிண்ட் டூ பாயிண்ட் பேருந்துகளையும் ஆய்வு செய்தார்.

அப்போது கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும் அனைத்து பேருந்துகளும் வருகிற 30ம் தேதிக்கு பிறகு கிளாம் பாக்கம் பேருந்து நிலையத்தில் இருந்துதான் இயக்கப்படும் என்றார்.



மொழிப்போர்த் தியாகிகள் தினத்தையொட்டி, நேற்று முன்தினம் (25.1.2024) சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் உள்ள மொழிப்போர்த் தியாகிகள் மணி மண்டபத்தில், தமிழ் மொழி காக்க இன்னுயிர் நீத்த தியாகிகளை நினைவு கூரும்வகையில் அவர்களது திருவுருவப் படங்களுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர்.எல்.சுப்ரமணியன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### கொள்முதல் நிலையங்கள் தேவையான இடங்களில் திறக்கப்பட்டு

# நெல் கொள்முதல் தங்கு தடையின்றி நடைபெறுகிறது!

## உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!



சென்னை, ஜன.27- நெல் கொள்முதல் நிலையங்கள் தேவையான இடங்களில் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் தங்கு தடையின்றி செய்யப்படுகின்றது என்று உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்பு நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பதற் காக மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் இரண்டு விவசாயிகள், வேளாண்மை இணை இயக்குனர், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஆகியோர் கொண்ட குழு அமைக்கப் பட்டுள்ளது. இதன்படி தேவைப்படும் இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் முதல் நாளன்று தொடங்கும் நெல் கொள்முதல் பணியானது, உழவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒரு மாதம் முன்னதாகவே செப்டம்பர் முதல் நாள் முதல் நெல் கொள்முதல் செய்திட ஒன்றிய அரசிடம் அனுமதி பெறப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளாக செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி முதல் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

**5,54,874 மெ. டன் நெல் கொள்முதல்!**

தமிழ்நாட்டில் 01.09.2023 முதல் நாளது தேதி வரை 5,54,874 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, 87,811 விவசாயிகளுக்கு ரூ. 1,257.81 கோடி அவர்கள் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

தற்போது காவிரி பாசன மாவட்டங்களில் (Delta Districts) சம்பா அறுவடைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நெல்வரத்து வர துவங்கியுள்ளதால் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க ஒப்புதல் ஆணை வழங்கப்பட்டுத் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

காவிரி மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், கடலூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் 957 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு 195 நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் நடைபெற்று வருகிறது. விவசாயிகள் தங்கள் நெல்லை எப்போது கொண்டுவந்தாலும் கொள்முதல் செய்ய இவை தயார் நிலையில் உள்ளன.

12 ஆண்டுகளுக்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் மாநில அரசு வழங்கும் ஊக்கத்தொகையை உயர்த்தி வழங்க ஆணையிட்டுத் தற்போது நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் குவிண்டால் ஒன்றிற்கு சன்னரக நெல்லுக்கு மாநில அரசின் பங்களிப்பு ரூ.107-ம் சேர்த்து ரூ.2,310-க்கும், பொதுரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு மாநில அரசின் பங்களிப்பு ரூ.82-ம் சேர்த்து ரூ.2,265-க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது.

நெல் கொள்முதல் தொடர்பாக விவசாயிகள் புகார் தெரிவிக்கும் பொருட்டு கட்டணமில்லா தொலைபேசி எண் (உழவர் உதவி மையம்) 1800 599 3540 மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய துறை உயர் அலுவலர்களின் அலைபேசி எண்கள் கொண்ட அறிவிப்புப் பதாகையும் புகார் பெட்டியும் ஒவ்வொரு நெல் கொள்முதல் நிலையத்திலும் வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்று அரசியல் கட்சி ஒன்றின் தலைவர் தன் டிவிட்டர் பக்கத்தில் நெல் கொள்முதல் நிலையங்கள் சரியாகத் திறக்கப்படுவதில்லை என்று பதிவிட்டுள்ளார். ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின் படி தேவைப்படும் இடங்களில் நெல்கொள்முதல் நிலையங்கள் உடனுக்குடன் திறந்து நெல் கொள்முதல் செய்யப்படும் விவரம் அந்தந்தப் பகுதி நெல் விவசாயிகளுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும்.

இன்று (25.01.2024) தலைமைச் செயலாளர் அவர்களால் காணொலி வாயிலாக நடத்தப்பட்ட காவிரிப் பாசன மாவட்ட ஆட்சித்தலைவர்களின் கூட்டத்திலும் நெல் கொள்முதல் நிலையங்களைத் தேவைப்படும் இடங்களில் விரைந்து திறந்து நெல் கொள்முதல் செய்திட வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடப்பு சம்பா பருவத்தில் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்வதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதால் விவசாயிகள் தங்கள் நெல்லினை இவற்றில் விற்றுப் பயன் பெற்றிடக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### திருப்பூரில் தனியார் தொலைக்காட்சி

# செய்தியாளர் தாக்கப்பட்டதற்கு முதல்வர் கண்டனம்!

## காவல் ஆய்வாளர் மீது நடவடிக்கை! செய்தியாளருக்கு ரூ. 3 லட்சம் நிதியுதவி வழங்க முதல்வர் உத்தரவு!

**சென்னை, ஜன. 27- திருப்பூர் மாவட்டம் தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு முதல்வர் கண்டனம் தெரிவித்துள்ளார். காவல் துறை அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும் சிகிச்சையில் உள்ள செய்தியாளருக்கு ரூ 3 லட்சம் நிதியுதவி வழங்கியும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

திருப்பூர் மாவட்டம் பல்லடம் பகுதியைச் சேர்ந்த, தனியார் தொலைக்காட்சி ஒன்றின் செய்தியாளர், நேச பிரபு அவர்கள் நேற்று அடையாளம் தெரியாத சில நபர்களால் தாக்கப்பட்ட செய்தி அறிந்து மிகவும் வருந்தினேன். ஊடக செய்தியாளர் மீதான இந்த தாக்குதல் நிகழ்ச்சி மிகவும் கண்டனத்திற்குரியது. இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது சட்டரீதியான கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சம்பவம் நடப்பதற்கு முன்பாக செய்தியாளர் நேச பிரபு காவல் நிலையத்தில் பாதுகாப்பு கோரியதன் மீது உரிய நடவடிக்கை எடுக்காத சம்பந்தப்பட்ட காவல் நிலைய ஆய்வாளர் உடனடியாக காத்திருப்போர் பட்டியலில் வைக்க முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும் இதனை ஒரு சிறப்பு நேர்வாக கருதி, மருத்துவ சிகிச்சையில் உள்ள நேச பிரபு அவர்களுக்கு, பத்திரிகையாளர் நல வாரியத்திலிருந்து ரூ.3 லட்சம் வழங்கிடவும் ஆணையிட்டுள்ளார்கள்.

### கேரள சட்டமன்றத்தில்

# அரசின் முழு உரையைப் படிக்காமல் பாதியில் சென்ற ஆளுநர்!

## ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கியதாக குற்றச்சாட்டு!

திருவனந்தபுரம், ஜன.27- கேரள சட்டப்பேரவையில் ஆளுநர் ஆரிப் முகமது கான் தனது உரையை முழுமையாக வாசிக்காமல் கடைசி பத்தியை மட்டும் படித்துவிட்டு சென்றது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்கள் மூலம் ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி வருகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளை செயல்பட விடாமல், ஆளுநர்கள் இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர். இந்நிலையில், கேரளாவில் கம்யூனிஸ்ட் அரசுக்கு அம்மாநில ஆளுநர் ஆரிப் முகமது கான் தொடர்ந்து பிரச்சினைகளை கொடுத்து வருகிறார்.

கேரளாவில் நேற்று முன்தினம் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் நிலையில், சட்டமன்றம் கூடியது. அப்போது, ஆளுநர் ஆரிப் முகமது கான், 63 பக்கங்கள் கொண்ட தனது உரையை முழுமையாக வாசிக்காமல் கடைசி பத்தியை மட்டும் படித்துவிட்டு சென்றுவிட்டார். கேரள அரசின் கொள்கை திட்டங்களை முழுமையாகப் படிக்க அவர் மறுத்துவிட்டார்.

சட்டப்பேரவைக்கு காலை 9 மணிக்கு வந்த ஆளுநர் ஆரிப் முகமது கான், 1 நிமிடம் 17 நொடிகளில் தனது உரையை முடித்துவிட்டார். 4 நிமிடங்களுக்குள் அவையில் இருந்து கிளம்பி விட்டார்.

கூட்டாட்சிக்கு எதிராக ஒன்றிய அரசு செயல்படுகிறது. உரிய நிதியை மாநிலத்துக்கு வழங்காததால் மாநிலத்தில் ஒன்றிய அரசே நிதி நெருக்கடியை ஏற்படுத்துகிறது என்ற பகுதிகள் ஆளுநர் உரையில் இடம் பெற்றிருந்தது. இதனை ஆளுநர் வாசிக்கவில்லை. ஆளுநர் ஜனநாயகத்தை கேலிப் பொருளாக்கி சட்டமன்றத்தை அவமதித்ததாக அரசியல் கட்சிகள் கருத்து தெரிவித்துள்ளன.

